பக்கங்கள் 23+2

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | மார்கழி 03 புதன்கிழமை 18.12.2024 | அதிர்வு 139

## இணுவில் பகுதியில் இளைஞரின் சடலம் மீட்பு

### மரணத்தில் சந்தேகம்

யாழ். சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




### தமிழ் மக்கள் தொடர்பான விடயங்களை அநுரவிடம் வலியுறுத்திய

# மோடிக்கு தமிழரசு நன்றி தெரிவிப்பு!

### யாழில் தந்தை செல்வாக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வில் சுமந்திரன் உரை




“இலங்கை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் செய்த சமயம் இந்தியப் பிரதமரோடு சேர்ந்து கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை தமிழ் மக்கள் தொடர்பாக மூன்று விடயங்களை வலியுறுத்தியிருக்கின்றார். இதனை நாங்கள் வரவேற்கின்றோம். இதற்காகப் பாரதப் பிரதமருக்கு நன்றி தெரிவிக்கின்றோம்.” 05▶



# கொழும்பில் இருந்து யாழ். நோக்கி வந்த பஸ் விபத்து; ஐவர் படுகாயம்

### ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின் மீட்கப்பட்ட பயணிகள்







(எஸ்.நிதர்ஷன்)

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த அதிசொகுசு பஸ் விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம், மிருசுவில் பகுதியில் இன்று புதன்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது. 02▶



### யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சத்தியமூர்த்தியால்

# அர்ச்சுனா எம்.பியிடம் 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி அவதூறு வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவிடம் 100 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி அவதூறு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியால் இன்று யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





### கொழும்பில் இருந்து...

கொழும்பில் இருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்த பஸ், முன்னால் சென்று கொண்டிருந்த லாண்ட்மாஸ்ரரை மோதி விபத்துக்குள்ளாகியது.

விபத்தில் பஸ்ஸின் நடத்துநர், லாண்ட் மாஸ்டர் சாரதி உள்ளிட்ட ஐவர் படுகாய மடைந்தனர். அவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்தியசலையில் சேர்க்கப்பட்டனர். மூவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸார்மேலதிகவிசாரணைகளைமுன்னெடுத்தனர்.

அதேவேளை, விபத்துக்குள்ளான பஸ்ஸின் வாயில் பக்கம் முற்றாகச் சேதமடைந்திருந்தமையால் பஸ்ஸினுள் இருந்த பயணிகள் ஒரு மணி நேரப் போராட்டத்தின் பின்னரே மீட்டெடுக்கப்பட்டனர்.



---

### இணுவிலில்...

தெரிவித்துள்ளனர்.

செட்டி வீதி, மேற்கு இணுவில் பகுதியைச் சேர்ந்த அமுதலிங்கம் நிவேதன் என்ற 31 வயதுடையவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு மேற்படி இளைஞர் வீட்டின் முன்புறம் உள்ள காணியில் இருந்த போது இரவு உணவுக்காக அவரது தாயார் இளைஞரை அழைத்துள்ளார்.

இதன்போது அவர் வருவதாக கூறிப்பிட்டு செல்லாமல் இருந்துள்ளார். நீண்ட நேரமாக அவர் வராத காரணத்தால் அவரது தொலைபேசிக்கு அழைப்பை விடுத்துள்ளார்கள். இருப்பினும் அவரின் தொலைபேசி செயலிழந்து காணப்பட்டுள்ளது.

இந்நிலையில், இன்று காணியில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கியவாறு அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது மரணத்தில் சந்தேகம் இருப்பதாக உறவினர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜனாதிபதியின் இந்திய விஜயம் தமிழருக்கு விடிவை ஏற்படுத்துமா?

## சுரேஷ் பிரேமச்சந்திரன் கேள்வி



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் இந்திய விஜயம் தமிழ் மக்களுக்கு விடிவை ஏற்படுத்துமா? என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி அநுரகுமாரவின் இந்திய விஜயத்தின்போது மேற்கொள்ளப்பட்ட இருதரப்புப் பேச்சுகள் மற்றும் கூட்டு பத்திரிகையாளர் மாநாடு குறித்தும், அங்கு தெரிவிக்கப்பட்ட கருத்துகள் தொடர்பிலும் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட கேள்வியை எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கையின் புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தனது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக இந்தியா சென்று வந்துள்ளார். ஜனாதிபதி அங்கம் வகிக்கும் ஜனதா விமுக்தி பெரமுண என்ற கட்சி ஆரம்பத்திலிருந்து இந்திய எதிர்ப்பு வாதத்தை தனது கட்சியின் கொள்கையாகக் கொண்டிருந்தது. இப்பொழுது தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஆட்சி அமைத்திருக்கக்கூடிய அநுர அரசானது தனது முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்தை இந்தியாவுக்கு மேற்கொள்ளக்கூடிய அளவுக்குப் பூகோள பிராந்திய அரசியல் சூழல் உருவாகியுள்ளது.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட போது அதில் இரண்டு ஷரத்துகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. அதில் ஒன்று ஈழத் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பானது. இரண்டாவது இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமான எந்தவொரு புற சக்திகளினதும் இடமாக இலங்கை இருக்கக்கூடாது என்பது. அந்தவகையில் இப்போது நடைபெற்ற பேச்சுகளிலும் இந்த இரண்டு விடயங்களும் மீண்டும் உறுதிபடப் பேசப்பட்டிருக்கின்றது.

இந்தியாவினது பாதுகாப்பென்பது இலங்கையின் பாதுகாப்புடன் இணைந்தது என்பதை இந்தியப் பிரதமர் இலங்கை ஜனாதிபதிக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றார். அதனை ஏற்றுக்கொண்ட இலங்கை ஜனாதிபதி இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமான எந்தவொரு விடயமும் இலங்கை மண்ணிலிருந்து அனுமதிக்கமாட்டோம் என்பதைத் தெளிவுபடக் கூறியிருக்கின்றார். அதேபோன்று இந்தியப் பிரதமர் சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் நல்லுறவை பலப்படுத்த வேண்டும் என்றும், அதற்கு முக்கியமாக இலங்கை அரசு ஏற்கனவே ஏற்றுக்கொண்டதைப் போல் அரசியல் யாப்பை முழுமையாக நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்தும்படியும் கோரியுள்ளார்.

இந்திய அரசு வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் தமிழ் மக்கள் தங்களது அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் தொடர்ந்தும் அக்கறையாக இருக்கின்றார்கள் என்பதை அவரது பேச்சுகள் தெளிவுபடுத்துகின்றது. ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் அந்த முயற்சிகளை வாழ்த்தி வரவேற்கின்றது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பல்வேறுபட்ட முக்கியமான விடயங்கள் பேசப்பட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டும் இருக்கின்றன. மின்சாரம், எரிபொருள் போன்றவற்றை கடல்நீருக்கடியினூடாக கொண்டுவருவதற்கான கொள்கை முடிவுகள் எட்டப்பட்டிருக்கின்றது. திருகோணமலை சம்பூரில் சூரியசக்தி மின்னுற்பத்தி நிலையத்தை உருவாக்குவதற்கும் இராமேஸ்வரம் - தலைமன்னார் படகு சேவைக்கும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி இலங்கையில் மின்சக்தி உற்பத்திக்குத் தேவையான திரவ எரிவாயு விநியோகம் போன்ற பல்வேறு விடயங்கள் பேசப்பட்டு முடிவுகளும் எட்டப்பட்டுள்ளன.

ஜனாதிபதியின் இந்திய விஜயம் இருதரப்பு உறவுகளுக்கு வலுச்சேர்த்துள்ள நிலையிலும் அரசியல் சாசனத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்தும்படி இந்தியா வலியுறுத்தியுள்ள சூழ்நிலையிலும் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய பரப்பில் களமாடும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இலங்கை தனது அரசியல் சாசனத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தல்களை விரைவாக நடத்தும்படி இலங்கை அரசை நிர்ப்பந்திக்க வேண்டும்.

1987ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்திலிருந்து பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றும்படியும் மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்தும்படியும் இந்திய அரசு கோரி வந்தது.

அதுமாத்திரமல்லாமல் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திலும் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தும்படி கூறிவந்துள்ளது.

இப்பொழுது பதின்மூன்றாவது திருத்தம் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லாமல் இலங்கையின் அரசியல் சாசனத்தை முழுமையாக நிறைவேற்றி மாகாண சபைத் தேர்தல்களை விரைந்து நடத்துமாறு கோரியிருப்பது என்பது இலங்கை அரசுடன் ஒரு சுமுகமான நல்லுறவை மேற்கொள்வதற்கான இந்தியாவின் ஒரு முயற்சியாகவே தோன்றுகின்றது.

இந்தநிலையில் எமது நீண்டகால நோக்கென்பது சமஷ்டியாகவோ அல்லது அதற்கு அப்பாற்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால், இன்றைய சூழ்நிலையில், தமிழ் மக்களது இருப்பைப் பாதுகாக்கவும் அவர்களின் பிரதேசங்களைப் பாதுகாக்கவும் இந்தியாவின் ஒத்துழைப்புடன் மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதென்பது மிகமிக முக்கியமானது.

விமல் வீரவன்ச, சரத் வீரசேகர, உதய கம்மன்பில்ல போன்றவர்களும் தமிழ் மக்களுக்கு அதிகாரப் பகிர்வு தேவையில்லை என்ற தோரணையில் மாகாண சபை முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும் என்று பேசுகின்றனர். ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.)யும் புதிய அரசியல் சாசனம் வரும்போது பதின்மூன்றாவது திருத்தம் இல்லாமல் செய்யப்படும் என்று கூறுகின்றார்கள். அதற்குப் பதிலாக தமிழ் மக்களுக்கான தீர்வு எவ்வாறு இருக்கும் என்பதைக் குறிப்பிடுவதற்கு அவர்கள் தயாராக இல்லை. தமிழ் மக்கள் மத்தியிலிருந்தும் இது ஒற்றையாட்சிக்கு உட்பட்டது. இதனால் பிரயோசனம் இல்லை. ஆகவே அது நிராகரிக்கப்பட வேண்டும் என்று சொல்லக்கூடியவர்களும் இருக்கின்றார்கள்.

சிங்கள இனவாத சக்திகள் பதின்மூன்றாவது திருத்தத்தை நிராகரிப்பதை நாங்கள் புரிந்துகொள்ள முடியும். அவர்கள் தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ள விரும்பவில்லை. தமிழ் மக்களை அடிமைகளாக நடாத்தவே விரும்புகின்றார்கள். ஆனால் ஆரம்பத்திலிருந்தே இந்தியா, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தினூடு கொண்டுவரப்பட்ட தீர்வினை நடைமுறைப்படுத்தும்படி தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது.

ஆகவே, இன்றைய காலகட்டத்தில் ஒற்றையாட்சிக்குள் தீர்வு சாத்தியம் இல்லை என்றும், எனவே அதனை நிராகரிக்கின்றோம் என்றும் கருத்துக்களைத் தெரிவிப்பதை விடுத்து, புதிய அரசியல் சாசனம் ஒன்றில் நாங்கள் கேட்கின்ற சமஷ்டி கோரிக்கை உள்வாங்கப்படும் வரையில் பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட்டு மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற வேண்டும் என்பதை அனைத்து தமிழ் கட்சிகளும் அனைத்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் வலியுறுத்த வேண்டும் என நாம் கேட்டுக்கொள்கின்றோம்." - என்றுள்ளது.



# கொட்டகலையில் தீ விபத்து! வீடுகள் எரிந்ததால் 22 பேர் நிர்க்கதி

(க.கிஷாந்தன்)

திம்புள்ள – பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஓ பிரிவில் 10 வீடுகள் கொண்ட 6 ஆம் இலக்கத் தொடர் லயக்குடியிருப்பில் இன்று முற்பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரு வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன.

இந்த நான்கு வீடுகளிலும் இருந்த 22 பேர் தற்காலிகமாக உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்டபோது வீட்டிலிருந்தவர்கள் எரிவதை கண்டு கூச்சலிட்டனர். அதன் பின்னர் அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்குத் தீ பரவாமல் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடுதுணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் எனப் பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

மேலும், இவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகத்தின் ஊடாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் தீ விபத்துக்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

இது தொடர்பாக திம்புள்ள – பத்தனை பொலிஸ் நிலையத்துக்குப் பிரதேசவாசிகளால் தகவல் அளிக்கப்பட்டது. அதன்பின் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் தீ பரவலுக்கான காரணங்களைக் கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்








## மோடிக்கு தமிழரசு...

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டு இன்று 75 ஆண்டுகள் பூர்த்தியாவதையொட்டி தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவுச் சதுக்கத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலைக்கு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களால் மலர் மாலை அணிவித்தும் மலர் தூவியும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தர்களான மாவை சேனாதிராஜா,சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்வின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் உரையாற்றும்போது,

“1956 ஆம் ஆண்டு முதல் இலங்கை தமிழ் மக்களுடைய ஜனநாயக ரீதியான தீர்ப்பு ஒன்றுதான். அது – இலங்கையில் சமஷ்டி அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே.

தங்களை ஒரு தனி தேசமாக கணிக்கின்ற – வரித்துக் கொண்ட – தமிழ் மக்களுடைய ஜனநாயகத் தீர்ப்பாக – முடிவாக – அது இருக்கின்றது.

கடந்த 75 வருடங்களாக தமிழ் மக்களுடைய கட்சியாக வியாபித்து இருக்கின்ற எங்களுடைய தமிழரசுக் கட்சியின் சார்பில், இப்போது புதிதாக வந்திருக்கின்ற இந்த அரசுக்கும் எமது கட்சியின் 75 ஆவது ஆண்டு நிறைவு நாளிலே ஒரு செய்தியை நாங்கள் சொல்லுகின்றோம்.

சர்வதேசத்தினால், சர்வதேச சட்டங்களினால், ஒரு மக்கள் கூட்டமாக கருதப்படுகின்ற எங்கள் இனத்தினுடைய ஜனநாயக தீர்ப்புக்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டும் என்ற செய்தியை இந்த புதிய அரசுக்கும் நாங்கள் வலியுறுத்திக் கூறுகின்றோம்.

நீங்கள் ஆட்சிக்கு வருகின்ற போது புதிய அரசமைப்பை உருவாக்குவோம் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறீர்கள். அதனை நிறைவேற்றுங்கள் என்று வலியுறுத்துகிறோம்.

1956 முதல் எந்தவித சலமும் இல்லாமல், சமஷ்டி ஆட்சி முறை இந்த இலங்கை தீவில் உருவாக்கப்பட வேண்டும் என்று வடக்கு, கிழக்கு தமிழர்கள் தொடர்ந்து ஜனநாயக முறையில் வலியுறுத்தி வரும் கோரிக்கை அந்த அரசமைப்பு உருவாக்கத்தின் போது உள்வாங்கப்பட வேண்டும் என்பதை இந்தத் தமிழரசுக் கட்சியின் அங்குரார்ப்பண நாளில் அரசுக்குக் கூறி வைக்க விரும்புகின்றோம்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் செய்த சமயம் இந்தியப் பிரதமரோடு சேர்ந்து கூட்டுப் பத்திரிகையாளர் சந்திப்பு இடம்பெற்றது. அதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கை தமிழ் மக்கள் தொடர்பாக மூன்று விடயங்களைத் தெரிவித்திருக்கிறார்.

முதலாவது – இலங்கையின் அரசமைப்பை முற்றுமுழுத்தாக நடைமுறைப் படுத்த வேண்டும் என்பது. காலா காலமாக இந்திய அறிக்கைகளில் பதிமூன்றாவது திருத்தம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்ற விடயம் சொல்லப்படுவது வழமை. 13 ஆவது திருத்தம் இலங்கை அரசமைப்பின் ஒரு பின்னிணைப்பு அல்ல, அது அரசமைப்பின் ஒரு பகுதி என்பதை நாங்கள் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வருகின்றோம். ஆகையினால் இலங்கையின் அரசமைப்பு முழுமையாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்று இந்தியப் பிரதமர் குறிப்பிடுவது 13ஆவது திருத்தம் மற்றும் தமிழ்மொழியின் நடைமுறையாக்கம் தொடர்பான 16 ஆவது திருத்தம் ஆகியவற்றையும் சேர்த்துதான் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

அதில் குறிப்பிட்ட படி காணி, பொலிஸ் அதிகாரங்கள் – அவை முழுமையாக வழங்கப்பட்டிருக்கின்றனவோ இல்லையோ – குறிப்பிட்டபடி வழங்கப்பட வேண்டும் என்பதுதான் இந்தியப் பிரதமரின் கருத்து.

இரண்டாவதாக அவர் கூறியிருப்பது இலங்கை தமிழ் மக்களுடைய அபிலாஷைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது.

தமிழ் மக்களுடைய அபிலாசை என்பது 1956 முதல் தெட்டத் தெளிவாக தமிழ் மக்கள் முன்னிறுத்தி வருகின்ற சமஷ்டி முறைத் தீர்வுதான், அதற்கு குறைவானது எதுவும் அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆகவே, தமிழ் மக்களின் அந்த அரசியல் அபிலாஷை நிறைவேற்றப்பட வேண்டும் என்பது பாரதப் பிரதமரின் கோரிக்கை.

மூன்றாவது விடயம் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதாகும்.

ஆகவே, இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவோ பக்கத்தில் வைத்துக் கொண்டு ஒரு கூட்டு பத்திரிகையாளர் மாநாட்டில் இவற்றை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தி இருக்கின்றமையை நாங்கள் வரவேற்கின்றோம்.

இதற்காகப் பாரதப் பிரதமருக்கு நன்றி கூறும் அதேவேளை, இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழ் இவ்விடயங்களில் இந்தியாவுக்கு இருக்கக்கூடிய கடப்பாடுகளையும் நாம் நினைவு கூற விரும்புகின்றோம்.

இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இலங்கை அரசுக்கு இருக்கின்ற அதேவேளை அவற்றை நிறைவேற்ற பண்ணுகின்ற எல்லாவிதமான இராஜதந்திர நகர்வுகளையும் இந்திய அரசு தொடர்ச்சியாக மேற்கொள்ளும் என்றும் நாங்கள் நம்புகின்றோம்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நீதி மறுப்புப் போக்கு

இலங்கையின் நீதி முறைமை குறித்து நாட்டின் சிறுபான்மையினர் - குறிப்பாக முஸ்லிம்களையும் உள்ளடக்கிய தமிழ் பேசும் சமூகம் - தொடர்ந்து நம்பிக்கையீனமாக இருந்து வருவதற்கு காரணமுண்டு. அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி வழங்கப்படுவதில் வேண்டுமென்றே மெத்தனப் போக்கு காட்டப்படுவது சரித்திர ரீதியாகத் தொடரும் விடயமாக இருக்கின்றது.

கொவிட் காலத்தில் தொற்றினால் உயிரிழந்தவர்களை கட்டாயம் எரித்தாக வேண்டும் என்ற நடைமுறை உலக வழக்கங்களுக்கு மாறாக இலங்கையில் அரசுத் துறை கட்டமைப்புகள் மூலம் வல்வந்தமாக முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக முஸ்லிம்களினதும் கிறிஸ்தவர்களினதும் பாரம்பரியங்களுக்கு மாறாக, உயிரிழந்த இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களும் கிறிஸ்தவர்களின் பூதவுடல்களும் கட்டாயப்படுத்தி எரிக்கப்பட்டன. முஸ்லிம்களின் அவலக் குரலுக்கு மத்தியில் அந்த சமூகத்தைச் சேர்ந்த மக்களின் ஜனாஸாக்கள் புதைக்கப்படுவதற்கு பதிலாக கட்டாயப்படுத்தி எரிக்கப்பட்டன. இலங்கையில் முஸ்லிம் சமூகத்தின் மன உணர்வுகளை ஆழமாகப் பதித்த இந்தக் கொடூரம் குறித்து இத்தனை ஆண்டுகள் கழித்தும் நீதி செய்யப்படவில்லை.


அப்போது இந்தக் கொடூரத்தை தொடர்வதற்கு முன்னிலையில் நின்ற சுகாதார சேவைகளின் இயக்குநர் நாயகம் வைத்தியர் அணில் ஜாசிங்க இப்போது சுகாதார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டிருக்கின்றமை பாதிக்கப்பட்ட தரப்புகளில் பெரும் மனக் குமுறல்களை ஏற்படுத்தியிருக்கிறது. சிறுபான்மை மக்கள் - குறிப்பாக முஸ்லிம் மக்கள் - தங்களுக்கு எதிரான முரட்டுத்தனமான, மிகக் கொடூரமான நடவடிக்கையாக இந்த நியமனத்தைப் பார்க்கிறார்கள்.

உலகில் எந்த இடத்திலும் இத்தகைய நிபுணத்துவ முடிவு நடைமுறையில் இருக்கவில்லை. கொவிட் தொற்றில் இறந்தவர்களைக் கட்டாயம் எரிக்க வேண்டும் என்ற விசித்திரமான நிபுணத்துவ ஆலோசனை இலங்கையில் மாத்திரம்தான் வழங்கப்பட்டது. கோட்டாய ராஜபக்ஷவின் ஆட்சியில்தான் அது முன்னெடுக்கப்பட்டது. ஆனால் அத்தகைய முடிவு முன்னெடுக்கப்பட்டதற்கு காரணமானவர்கள் யார் என்ற விடயம் இன்னும் விவரமாகத் தெளிவுபடுத்தப்படவில்லை. வெறுமனே நிபுணத்துவ ஆலோசனை என்ற பெயரில் இந்தவிவரம்அரங்கேற்றப்பட்டிருக்கின்றது. அந்த நிபுணத்துவ ஆலோசனையை வழங்கிய நிபுணர்கள் யார் என்றோ, குழு எதுவென்றோ வெளிப்படுத்தப்படவில்லை. அதிலே மூடி மறைப்பு தொடர்கின்றது.

இது விடயத்தில் வழமை போல ஆணைக் குழுக்களை நிறுவி, காலத்தை இழுத்தடிக்காமல், சுகாதாரத் துறை சார்ந்த விசாரணைகளை நீதி நேர்மையாக நடத்தி, உண்மையை வெளிப்படுத்தும்படி முஸ்லிம்களின் தலைவரான ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கோரியிருக்கிறார். முன்னைய ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற தவறுகளை - பிழைகளை - ஊழல்களை - மோசடிகளை - சீரழிவுகளை - அம்பலப்படுத்தி, உண்மைகளை வெளிப்படுத்தி, பொறுப்புக் கூறலையும் நீதியையும் நிலைநாட்டுவோம், உரிய நடவடிக்கை எடுப்போம் என்று கூறி அதிகாரத்துக்கு வந்த தேசிய மக்கள் சக்தி இந்த விடயத்தில் முன்னைய ஆட்சியாளர்களின் கொடூர நடவடிக்கையை மூடி மறைக்கும் போக்கில் செயற்படுவதுடன், அந்த வேளையில் அத்தகைய செயற்பாடு இடம்பெறுவதற்கு காரணமானவர்களுக்கு தன்னுடைய அரசில் முக்கிய பதவிகளை - இடங்களை - வழங்கி நிற்பது சிறுபான்மையினர் மத்தியில் நீதி செய்யப்படும் விடயம் தொடர்பில் மேலும் அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தி நிற்கின்றது.

இந்த விடயத்தில் நிபுணத்துவக் குழு வேண்டுமென்றே இனவாதமாகச் செயல்பட்டு இருக்குமானால், அது பற்றி துறை சார் விசாரணை நடத்தி, உண்மைகளை அம்பலப்படுத்தி, தவறிழைத்தோரை தண்டிப்பதன் மூலம் மட்டுமே சிறுபான்மையினர் மத்தியில் தோன்றி இருக்கக்கூடிய அதிருப்தியைக் களைய முடியும்.

அரச நிர்வாக ரீதியாக சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்ட பெரும் கொடூரம் குறித்து விசாரணை நடத்தி, உண்மைகளைக் கண்டறிந்து, நீதியை நிலை நாட்ட முடியாத இந்த அரசு, கடந்த காலங்களில் இடம்பெற்ற ஊழல், மோசடி, முறைகேடுகள், சீரழிப்புகள் குறித்து நடவடிக்கை எடுக்கும் என்று பிரபலாபிப்பது 'கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன், வானமேறி வைகுண்டம் போவேன் என்றானாம்' என்ற கதை மாதிரித்தான் இருக்கும்.


Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Haram NEK 318
Haram NEK 473
Haram NEK 477
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# குருளைச் சாரணருக்கு சின்னம் சூட்டும் விழா

(எம். எப். றிபாஸ்)

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரண சங்கத்தின் ஏற்பாட்டில் அக். முஹம்மதியா கனிஷ்ட வித்தியாலய குருளைச் சாரணர்களுக்கான சின்னம் சூட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஏ.நபுஹர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வுக்கு அக்கரைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி ஏ.எல். ஜெய்னுடீன் பிரதம அதிதியாகவும் மாவட்ட சாரண ஆணையாளர் எம்.ஐ. உதுமாலெப்பை, உதவி ஆணையாளர் எம். எச். ஹம்மாத் ஆகியோர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

சாரண ஆசிரியை ஜே. அஸ்மியாவின் ஒத்துழைப்புடன் இடம்பெற்ற இந்தச் சாரணர் சின்னம் சூட்டு விழாவில் சுமார் ஐம்பது குருளைச் சாரணர்கள் கலந்து கொண்டு சின்னங்களை பெற்றுக் கொண்டனர்.









# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பது தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு

(க.கிஷாந்தன்)

பெண்களுக்கு எதிரான மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறைகளை ஒழிப்பதற்கான தேசிய செயற்றிட்டம் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் பிரிடோ நிறுவனம் நுவரெலியா மாவட்டத்தில் தோட்டப்புற மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு திட்டங்களை முன்னெடுத்த வந்தது. இந்த நிலையில் பிரிடோ நிறுவன நிறைவேற்று பணிப்பாளர் மைக்கல் ஜோக்கிம் தலைமையில், பிரிடோ பெண்கள் வலய அமைப்பின் ஏற்பாட்டில் ஹட்டனில் விசேட நிகழ்வுகள் இடம் பெற்றன.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலைச்செல்வி கலந்துக் கொண்டார்.

வீட்டில் பெண்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறைகளைத் தடுத்தல் மற்றும் பணியிடத்தில் பெண்கள் முகங் கொடுக்கும் துன்புறுத்தல்களைத் தடுப்பதற்கு இந்தத் திட்டம் ஊடாக பிரயோக ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இதன்போது கலந்துக் கொண்ட பெண்கள் கருத்துத் தெரிவித்தனர்.





# சட்டவிரோதமாக மணல் ஏற்றிய மூன்று டிப்பர்களுடன் மூவர் கைது!

(த.சுபேசன்)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏ-32 வீதியூடாகச் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிச்சென்ற மூன்று டிப்பர் வாகனங்கள் சனிக்கிழமை சாவகச்சேரிப் பொலிஸாரிடம் அகப்பட்டன. அதன் சாரதிகளையும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திர மணலை மேலே பரவி அதன் கீழ் வெள்ளை மணலைக் கடத்திச் சென்ற டிப்பர் வாகனங்களே இவ்வாறு அகப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் ஒரு தடவைக்கான அனுமதிப்பத்திரத்தை வைத்துக் கொண்டு அன்றைய நாள் முழுவதும் வெள்ளை மண் கடத்தலில் ஈடுபடுகின்றனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றன.

சாவகச்சேரிப் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து மேற்படி கைது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.





# இரண்டு விருதுகளைப் பெற்றுள்ளார் ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல்!

(எஸ்.அஷ்ரப்கான்)

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் கடந்த 11 ஆம் திகதி திருகோணமலையில் இந்து கலாசார மண்டபத்தில் நடத்தப்பட்ட தமிழ் இலக்கிய விழா நிகழ்வில், ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் 2023 ஆம் ஆண்டின் ஊடகத்துறைக்கான "இளங் கலைஞர் விருது" வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



இதன்போது ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேல் பொன்னாடை போர்த்தி, சான்றிதழ் மற்றும் விருது வழங்கி சபையோர் மத்தியில் கௌரவிக்கப்பட்டார்.

இந்நிலையில் சிறந்த ஊடகவியலாளருக்கான 2024 ஆம் ஆண்டுக்கான விருதும் கிடைக்கப்பெற்றுள்ளது.

பிரான்ஸ் சர்வதேச தமிழ் வானொலியின் 28 ஆவது ஆண்டு விழா யாழ்ப்பாணம் றில்கோ மண்டபத்தில் சனிக்கிழமை (14) இடம்பெற்றது. இதன்போது 'சிறந்த ஊடகவியலாளருக்கான விருது -2024' ஊடகவியலாளர் வடிவேல் சக்திவேலுக்கு வழங்கப்பட்டது.

விருதை பூமணி அம்மா அறக்கட்டளையின் தலைவரும், ஐ.ரி.ஆர். சர்வதேச தமிழ் வானொலியின் பணிப்பாளருமான வி.சு. செல்வராஜா, தமிழ்நாடு கல்லிக்கடைக் குறிச்சி தேசிய கல்வி அறக்கட்டளையின் நிறுவுனரும் தொழிலதிபருமான முனைவர் ஆ.முகமது முகைதீன், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர் கலாநிதி சதீஸ்குமார் சிவலிங்கம், கனடா யுகம் வானொலியின் சிரேஷ்ட அறிவிப்பாளர் மும்தாஜ் கலீல் ஆகியோர் வழங்கிவைத்தனர்.



# பிளாஸ்ரிக் குறைப்புத் தொடர்பிலான விழிப்புணர்வு சிரமதானம் மன்னாரில்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் கீரி கடற்கரையில் பிளாஸ்ரிக் பாவனை குறைப்பு தொடர்பான விழிப்புணர்வு சிரமதானம் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்றது .

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் இளைஞர் குழுவினர் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

அத்தோடு மாவட்ட மட்ட கலந்துரையாடலும் இடம்பெற்றது.

இதில் 15 இளைஞர்கள் பங்குபற்றினர். இந்த நிகழ்வு தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் மாவட்ட இணைப்பாளர் பெனடிக் குரூஸின் ஏற்பாட்டில், திட்ட செயற்பாட்டாளர் பிரியந்தா தலைமையில் இடம்பெற்றது.





# அரசியல் காற்றழுத்தத்துக்குள் சிக்கிவிடாது தமிழ் தேசமாக ஓரணியில் திரள வேண்டும்!

## அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு

(பா.சதீசன்)

இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து எழுவதை போல், அரசியல் காற்றழுத்தத்துக்குள்ளும் சிக்கிவிடாது தமிழ்த் தேசமாகத் தேசியம் காக்க ஓர் அணியில் திரண்டெழ வேண்டும். இல்லையேல் கரணம் தப்பினால் மரணமே என்பதை நினைவில் கொள்வோம்.

இவ்வாறு சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

தற்போதைய தொடர் காற்றழுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து எழும் நாம் தொடரும் காற்றழுத்தங்களுக்கு எம்மை தயார்படுத்துகிறோம்.

இதேபோல் அரசியல் காற்றழுத்தத்துக்குள்ளும் சிக்கிவிடாது தமிழ் தேசமாக தேசியம் காக்க ஓர் அணியில் திரண்டெழ வேண்டிய காலகட்டம் இது. இல்லையேல் கரணம் தப்பினால் மரணமே என்பதை நினைவில் கொள்வோம்.

நடந்து முடிந்த தேர்தல்களின் அரசியல் காற்றழுத்தத்தை தம்பக்கம் திருப்பியதை போன்று உள்ளூராட்சி மன்ற தேர்தலில் குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகளை தமதாக்க தேசிய மக்கள் சக்தி வகுக்கும் வியூகம் தமிழர்களின் தாயகம் தேசியம் தொடர்பில் எதிர்மறை தாக்கத்தை செலுத்தும் பலப் பரீட்சையாக அமையப் போகின்றது.

தாயக தமிழர் அரசியல் தலைமைகளும், சிவில் சமூகமும், பொது மக்களும் நன்கு உணர்ந்து, எதிர்நோக்கும் ஆபத்தில் இருந்து தற்காத்துக் கொள்ள பலத்த கூட்டணியாக எம்மை ஆயத்தப்படுத்தல் வேண்டும்.

ஜனாதிபதி தேர்தலைத் தொடர்ந்து நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியாகிய மக்கள் விடுதலை முன்னணி தமிழர் தாயகத்தில் கைப்பற்றிய எட்டு ஆசனங்களோடு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தமதாக்கி எதையும் சாதிக்கும் நிலையில் உள்ளது.

அத்தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து தெற்கில் சிங்கள பௌத்த கருத்தியல் கொண்ட இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கருத்துருவாக்கிகளும் வடக்கு, கிழக்கில் பிரிவினைவாதம், இனவாதம், தோற்றுவிட்டது எனக் கூறி எமது 76 வருட அரசியல் கோரிக்கைகள், அதற்கான பேச்சுகள், போராட்டங்கள் அனைத்தையும் அவமானப்படுத்தி உள்ளமைக்கு தகுந்த பதிலடியை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாம் கொடுக்க வேண்டும்.



பெரும் தேசிய வாத கட்சிகளான தேசிய மக்கள் சக்தி உட்பட ஏனைய கட்சிகள் தமிழர் தாயகத்தின் உள்ளூராட்சி மன்றங்களை கைப்பற்றுவதன் மூலம் "அடிமட்ட கிராமிய மற்றும் நகர் வாழ் தமிழ் மக்கள், தமிழ் அரசியல் தலைமைகளையும், அவர்களின் பாரம்பரிய அரசியலையும், அரசியல் சித்தாந்தங்களையும், விடுதலை போராட்டங்களையும் வெறுக்கிறார்கள். சிங்கள பௌத்த ஒற்றை ஆட்சியின் கீழ் அதன் அரசியல் தலைமைத்துவத்தின் கீழ் வாழ விரும்புகின்றார்கள்" என உலகுக்கே கூற ஆயத்தமாகி உள்ளனர்.

அதுமட்டுமல்ல நடைபெறவுள்ள தேர்தலிலும் பேரினவாத சக்திகள் தமிழர் தாயகத்தில் வெற்றி பெற்றால் நாம் இதுவரை காலம் சர்வதேசத்திடம் கொண்டு செல்லும் இன அழிப்பு, இனப் படுகொலை, யுத்தக் குற்றம் தொடர்பாக விசாரணை, வலிந்து காணாமலாகப்பட்டோருக்கான நீதிக் கோரல் என்பதெல்லாம் புதிய மாற்றத்துக்கான அரசாக தம்மை அடையாளப்படுத்தும் தேசிய மக்கள் சக்திக்குள்ளும், இலங்கை நாட்டுக்குள்ளும் முடக்கப்பட்டுவிடும் அபாயமும் உள்ளது.

இது பேரினவாதத்துக்குக் கிடைக்கும் பெரும் வெற்றியாகவும் அமைந்துவிடும். இது தோற்கடிக்கப்பட வேண்டும்.

எமது தாயக அரசியல் வரலாற்றில் அரசியல் கொள்கை பிறழ்ந்தவர்களும், பேரினவாத ஆட்சியாளர்கள் கிள்ளிக் கொடுக்கும் சுகங்களில் வாழ்வு கண்டவர்களும், குறிப்பாக கடந்த 15 வருட காலமாக அரச வளங்களில் தமது அபிலாசைகளை பூர்த்தி செய்து கொண்டவர்களும் எமக்குள் பிளவை உருவாக்கி அரசியல் குளிர் காய்ந்தனர். இதனால் நாம் பல பின்னடைவுகளை சந்தித்துள்ளோம். இந்த நிலையை இனியும் தொடரவிடக்கூடாது.

எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் 50 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகள் களப்பலியானதும், உயிர்த் தியாகமானதும், இறுதி யுத்தத்தில் லட்சத்தைத் தாண்டியோர் படுகொலை செய்யப்பட்டதும் படையினரிடம் கையளிக்கப்பட்ட பல ஆயிரம் பேர் காணாமலாக்கப்பட்டதும் அரசியல் கைதிகள் விடுதலையின்றி சிறைகளில் வாடுவதும் நாம் ஒற்றை ஆட்சியின் கீழ் அடிமைகளாக வாழ்வதற்கு அல்ல. மக்கள் விடுதலை முன்னணியால் பிரிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு இணைந்த தமிழர் தாயகம், சுயநிர்ணய உரிமையோடு அமைந்த சமஷ்டி அரசியல் அமைப்பு எனும் கருத்தியலே எமது அரசியல். இதற்கு எந்த வகையிலும் பங்கம் ஏற்படுத்த இடமளிக்க முடியாது. மக்கள் பலத்தோடு முன்னோக்கி நகர்த்தும்பாரிய காலக்கடமை எம்முன் உள்ளது.

தற்போதைய அரசியல் அபாய நிலை உணர்ந்து நாடாளுமன்ற கட்சிகளான தமிழ் தேசிய முன்னணி, தமிழரசு கட்சி, ரெலோ ஆகிய தலைமைகளுக்கிடையில் ஆரம்பித்திருக்கும் கலந்துரையாடல் வலிமை பெறல் வேண்டும். தமிழ் மக்கள் பேரவை முன்வைத்த தீர்வு யோசனைகளை மையப் புள்ளியாய் கொண்டு கலந்துரையாடல் முன்னோக்கி நகர்த்தப்படுவதை தமிழ் தேசிய ஆர்வலர்கள், உணர்வாளர்கள் வரவேற்கின்றனர்.

இந்தக் கூட்டு செயற்பாடு பொது வெளியிலும் அவசரமாக விரிவடைய வேண்டும். கடந்த கால தோல்விகள், ஏமாற்றங்கள் எந்த வகையிலும் தாக்கம் செலுத்த இடம் அளிக்கக்கூடாது. எமக்கிடையே அரசியல் பகைமையை வளர்க்கும் காலம் இதுவல்ல. அரசியல் தலைமைத்துவங்களுககு இடையிலும் கட்சிகளுக்கிடையிலுமான தனித்தோடும் போட்டியில் மக்கள் தோல்வி காண்பது என்பது நாமே எம் அரசியலை கொலை செய்வதற்கு ஒப்பாகும். அதுமட்டுமல்ல அதுவே இறுதி இன அழிப்புக்குள் எமை தள்ளுவதோடு நாமே குற்றவாளிகளாகி விடுவோம் என்பதையும் மறக்கக்கூடாது.

நாட்டின் அரசியல் களநிலை எதிர்வரும் காலங்களில் நமக்கு உகந்ததாக அமையப்போவதில்லை. இதற்கு முகம் கொடுக்க தமிழ் தேசமாக மீள எம்மை பலப்படுத்தி எழுச்சி கொள்ள வேண்டும். தற்போது கட்சிகள் இடையில் ஆரம்பித்திருக்கும் முதற்கட்ட பேச்சுவார்த்தை மேலும் பலமடையவும் நாடாளுமன்றத்துக்கு வெளியிலும் வடக்கு, கிழக்கு எங்கும் பொது மக்கள் மத்தியிலும் கலந்துரையாடல் தீர்க்கமான முடிவை எட்ட ஆரம்ப கட்ட பேச்சு வார்த்தை வெற்றியடைய வேண்டும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் அறிவிக்கும் முன்னர் கூட்டுத் தன்மையை போட்டியிடும் கட்சிகள் வெளிப்படுத்த வேண்டும்.

மாவீரர் வாரத்திலும் மாவீரர் நினைவேந்தல் தினத்திலும் கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது வீடுகளிலும் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் விளக்கேற்றிய மக்கள் தெற்குக்கு வழங்கி செய்யை உள்ளூராட்சி மன்றத் தேர்தலிலும் வெளிப்படுத்தி எமது அரசியல் உறுதிப்பாட்டை தெற்குக்கு வெளிப்படுத்துவோம். காலம் கடத்தாது எமது காலக்கடவையை நிறைவேற்றுவோம்.- என்றுள்ளது.

# பால்நிலை சார்ந்த வன்முறைகளுக்கு எதிரான செயற்பாடுகள் காலத்தின் தேவையாக உள்ளன

## வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன்

(த.சுபேசன்)

1990 ஆம் ஆண்டுகளில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பெண்கள் மற்றும் சிறுமியர்களுக்கு எதிரான பால்நிலை சார்ந்த வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் எமக்கு புதுமையாக இருந்தன. ஆனால் இன்று அந்த விழிப்புணர்வுச் செயற்பாடு வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அவசியமானவையாக உள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாண சபையில் இடம்பெற்ற பால்நிலை சார்ந்த வன்முறைகளுக்கு எதிரான விழிப்புணர்வு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.



இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

யுத்த சூழலுக்குப் பின்னர் பெண்கள் மற்றும் சிறுமிகள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு ஓர் திட்டமாக அமைய வேண்டும்.

அண்மையில் ஓர் கூட்டமொன்றில் ஒரு தரப்பினர், சட்டம் உள்ளது, அதனை செயற்படுத்துவதற்கான நிறுவனங்களும் உள்ளன. ஆனால் செயற்பாடுகள் ஏன் இல்லை என்று கேள்வி எழுப்பியிருந்தனர்.

பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களும் அந்த விதத்தில்தான் உள்ளன. அடிப்படையில் இருப்பவர்களின் ஊக்கமான செயற்பாடே மாற்றத்தை ஏற்படுத்தும்.

சனப்பெருக்கத்தில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக உள்ளனர். ஆனால் அவர்களுடைய அறியாமை மற்றும் விழிப்புணர்வு இன்மை பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றன.

நாம் கற்கும் காலத்தில் ஆண் ஆசிரியர்கள் அதிகம் இருந்தனர்.ஆனால் தற்போது 80 சதவீதம் பெண் ஆசிரியர்களாக உள்ளனர். இது சமூக மாற்றத்துக்கான சிறந்த ஆரம்பப் புள்ளி.

அந்தவகையில் கிறிசலிஸ் நிறுவனம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பால்நிலை சார் வன்முறைகளுக்கு எதிராக சரியான இலக்கோடு பயணித்து வருகின்றது.- என்றார்.





# கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புக்கு உதவி!

(எம். எப். றிபாஸ்)

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கிராமிய பொருளாதாரப் பிரிவால் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய வீட்டு ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் ஆடு வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (16) இடம்பெற்றது.

அட்டாளைச்சேனையில் பிரதேச செயலாளர் பீ.ரீ. எம்.இர்பானின் வழிகாட்டலின் கீழ் உதவி திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எல்.ஏ.மஜீட் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கிவைக்கப்பட்டன.

கால்நடை வைத்திய அதிகாரி ஏ.தையுபா, பிரதேச செயலக கணக்காளர் எம்.அரசரத்தினம், விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கால்நடை வைத்திய அலுவலக உத்தியோகத்தர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.





# நிந்தவூர் வைத்தியசாலையில் சிரமதானம்!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்திருந்த பாரிய சிரமதானப் பணிகள் கடந்த சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டன.

நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதாம்பாவா தலைமையில் தேசிய மக்கள் சக்தியின் நிந்தவூர் பிரதேச அமைப்பாளர் சம்சுன் அலி மற்றும் முக்கியஸ்தர்களான எம்.எம்.ஜவ்பர், எம்.பாரூக் உள்ளிட்ட கட்சியின் செயற்பாட்டாளர்களும் வைத்தியசாலை நிர்வாகத்தினரும் இணைந்து இந்தச் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர்.

இதன்போது வைத்தியசாலையின் சுற்றுச் சூழல் முற்றாக துப்பரவு செய்யப்பட்டு, கழிவுகள் அகற்றப்பட்டுள்ளன.



# மருதமுனை அனர்த்த முகாமைக் குழு கல்முனை மாநகர சபைக்குப் பாராட்டு



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கடந்த வெள்ளப் பெருக்கின்போது கல்முனை மாநகர சபை முன்னெடுத்த அனர்த்தக் கட்டுப்பாடு மற்றும் மீட்பு நடவடிக்கைகளை மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழு பாராட்டியுள்ளது.

மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழுவின் பிரதிநிதிகள் அதன் தலைவர் மௌலவி எப்.எம்.ஏ. அன்ஸார் மௌலானா தலைமையில் கல்முனை மாநகர சபைக்கு விஜயம் செய்து உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீமை சந்தித்து மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸ்'க்கு முகவரியிடப்பட்ட பாராட்டுக் கடிதத்தை கையளித்தனர்.

கடந்த நவம்பர் மாதம் பிற்பகுதியில் தாழமுக்கம் காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அனர்த்தத்தில் இருந்து மக்களையும் சொத்துகளையும் பாதுகாப்பதற்காக கல்முனை மாநகர சபையானது துரிதமாக செயற்பட்டது. மிகவும் அர்ப்பணிப்புடன் இரவு பகலாக இப்பணிகளை சிறப்பாக முன்னெடுத்திருந்தது. இது மிகவும் போற்றத்தக்க பணியாகும் என்று பாராட்டியுள்ள மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழு, இந்தச் சேவைக்காக மக்கள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது என்றும் குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை, எதிர்கால அனர்த்தங்களைக் கருத்தில் கொண்டு மருதமுனை பிரதேசத்தில் மேலதிகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பிலும் பல்வேறு முன்மொழிவுகளை மருதமுனை அனர்த்த முகாமைத்துவக் குழுவினர் இதன்போது கல்முனை மாநகர சபையிடம் சமர்ப்பித்தனர். அவற்றை கூடிய விரைவில் நிறைவேற்றித் தருமாறு வலியுறுத்தியுள்ளனர்.



# கழக புதிய சீருடை அறிமுகம்!

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

மத்திய முகாம் யுனைடெட் நண்பர்கள் கழகத்தின் வேண்டுகேளுக்கு இணங்க நளீர் பௌன்டேசன் அமைப்பின் அனுசரணையில் புதிய சீருடை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு அமைப்பின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் எம்.ஏ. நளீர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்களான ஜஹான் மற்றும் யோகநாதன் மற்றும் மத்திய முகாம் முஹம்மதியா ஜும்மா பள்ளிவாசலின் மௌலவி றிபாஸ் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் அமைப்பின் செயற்பாட்டாளர்கள், கழக உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.







# யூசிமாஸ் சர்வதேச போட்டியில் மன்னார் மாணவர்கள் சாதனை

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இந்தியாவின் புதுடில்லியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற யூசிமாஸ் சர்வதேச மட்டப் போட்டியில் இலங்கையில் இருந்து 103 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களில் மன்னார் யூசிமாஸ் கல்வி நிறுவனத்தில் கல்வி பயிலும் 6 மாணவர்களும் பங்குபற்றி வெற்றி கிண்ணங்களைப் பெற்று மன்னார் மாவட்டத்துக்கும் இலங்கைக்கும் பெருமையைச் சேர்த்துள்ளனர்.

அந்த வகையில் ராஜநாயகம் ரியானா (மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை), ஜக்கேயு றெறா ஜெசாறி (டிலாசால் ஆங்கிலப் பாடசாலை), குணசேகரன் ஆருஷன் (டிலாசால் ஆங்கிலப் பாடசாலை), செலமியா தேசுரா வின்சன்ட் (டிலாசால் ஆங்கிலப் பாடசாலை), வின்சன்ட் செஸான் ஜெத்னியல் (புனித சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை) , செல்வக்குமரன் மேரி எய்மீ (புனித சேவியர் பெண்கள் தேசிய பாடசாலை) ஆகியோர் வெற்றிக் கிண்ணங்களைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.




அத்துடன், வின்சன்ட் செஸான் ஜெத்னியல் என்ற மாணவன் அங்கு நடைபெற்ற யூசிமாஸ் உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொண்ட நால்வர் கொண்ட அணிக்குத் தலைமை தாங்கி இலங்கைக்கு வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இவர்கள் அனைவரும் மன்னார் யூசிமாஸ் நிறுவனத்தின் நிர்வாகி நடராஜா கேதீஸ்வரன் மற்றும் ஆசிரியர் யசோதா கேதீஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலில் இந்தச் சாதனையைப் படைத்துள்ளனர்.



# 15 லட்சம் ரூபா பெறுமதியான பலகைகளை டிப்பர் வாகனத்தில் கடத்திச் சென்றோர் கைது!

**(த.சுபேசன்)**

15 லட்சம் ரூபா பெறுமதியான மரப் பலகைகளை மல்லாவியில் இருந்து டிப்பர் வாகனத்தில் சட்டவிரோதமாக எடுத்து வந்த இருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் நாவற் குழிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

அனுமதிப் பத்திரத்துடன் கூடிய மரப்பலகைகளை மேற்புறமும் அனுமதிப் பத்திரம் இன்றிய மரப் பலகைகளை டிப்பர் வாகனத்தின் கீழ்புறமும் வைத்து மறைத்து எடுத்து வந்த நிலையில், சாவகச்சேரிப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

15 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரை, தேக்கு மற்றும் வேப்ப மரப் பலகைகளைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் ஊர்காவற்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.



# மெழுகுதிரி உற்பத்திப் பயிற்சிநெறி சாவகச்சேரியில் ஆரம்ப நிகழ்வு!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி கோவிற்குடியிருப்பு கிராமத்தில் மெழுகுதிரி உற்பத்தி இலவச பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு கடந்த சனிக்கிழமை கிராமத்தில் உள்ள திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்றது.

கோவிற்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில் உள்ள மகிழங்கேணி மற்றும் உதயசூரியன் பகுதி மக்களுடைய வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் தென்மராட்சி அபிவிருத்திக் கழகம் ஊடாக இந்த இலவச பயிற்சி நெறி வழங்கப்படுகின்றது.

பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வில் தென்மராட்சி அபிவிருத்திக் கழக பிரதிநிதி சஞ்சேயன்,கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சுபேசன் மற்றும் செயலாளர் தர்ஷன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# தில்லை ஆறு - சம்புக்களப்பைத் திருத்தும் வேலைத் திட்டத்தை விரைவாக ஆரம்பிக்குக!

## உதுமாலெப்பை எம்.பி. அம்பாறை ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் கோரிக்கை

(எஸ்.அஷ்ரப்கான்,
கே. எ. ஹமீட்)



தில்லை ஆறு – சம்புக்களப்பை ஆழமாக்கி, அகலமாக்கும் வேலைத் திட்டத்தை விரைவாக ஆரம்பிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் உதுமாலெப்பை அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் குறிப்பிடும் போது,

கல்லோயா திட்டத்தால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு , திருக்கோவில், பிரதேசங்களில் அமைந்துள்ள 8500 ஏக்கர் விவசாயக் காணிகள் நீரில் மூழ்கி உள்ளன.

வெள்ளம் ஏற்படும் எல்லாக் காலங்களிலும் இந்தப் பிரதேச மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

உலக வங்கித் திட்டத்தில் தில்லை ஆறு – சம்புக் களப்பை ஆழமாக்கி, அகலமாக்க 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படாமல் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

எனவே இந்த வேலைத்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்க வேண்டும். இது தொடர்பாக பிரதேச செயலாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், விவசாய அமைப்புகள் எல்லோரும் நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளனர்.

எனவே இப்பிரதேச மக்களின் நன்மை கருதி விரைவாக இவ் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தில் கடந்த வருடமும் இந்த வருடமும் ஏற்பட்ட வெள்ளத்தால் விவசாயிகளுக்கு தொடர்ந்து பாரிய நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பொருளாதாரமும் பாரிய வீழ்ச்சி அடைந்துள்ளது.

வெள்ளம் ஓடுவதற்குத் தடையாக இருக்கும் அணைக்கட்டுக்கள், பிரதான வாய்க்கால்கள் புனரமைக்கபடவேண்டும். சம்மாந்துறை தொப்பியங்கொட புனரமைக்கப்படாமல் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சுக்கு சொந்தமான தீகவாபி – களியோடை வீதி , தீகவாபி – பாலமுனை வீதிகளுக்கு 250 மில்லியன் ரூபா செலவில் புனரமைப்பு செய்யும் செயற்பாடுகள் பயனற்றது.

எனவே வெள்ளத்தால் பாதிக்கப்படும் பிரதேசங்களை அடையாளம் கண்டு எதிர் காலத்தில் நிரந்தரத் தீர்வுகளுக்குத் திட்டமிட்டுச் செயற்படவேண்டும். இல்லை என்றால் அரசின் பெருந்தொகையான பணம் வருடா வருடம் வீண் விரயம் செய்யப்பட வேண்டிய நிலைமை ஏற்படும்.

இதேவேளை பொத்துவில் பிரதேசத்தில் அமைந்துள்ள துவ்வை ஆறு அணைக்கட்டு ஒவ்வொரு வெள்ளத்தின் போதும் சேதமடைவதால் பசறிச்சேனை கிராமமே வெள்ளத்தில் மூழ்குகிறது.

பொத்துவில் துவ்வை ஆறு அணைக்கட்டை விசேட அபிவிருத்தி திட்டத்தில் சேர்த்து புனரமைக்க வேண்டும்.

இதே வேளை ஹெட ஓயா நீர்ப்பாசனத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்களின் ஆயிரக்கணக்கான விவசாய காணிகளுக்கும் நீர்ப்பாசனம் கிடைக்கும். எனவே ஹெட ஓயா நீர்ப்பாசனத் திட்டத்தின் பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் நிதி இல்லையென்றால் வெளிநாட்டு நிதியை பெறுவதற்கான ஏற்பாடுகளை நீர்ப்பாசனத் திணைக்களம் மேற்கொள்ள வேண்டும்.

இவ் வருடம் அம்பாறை மாவட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 300 மில்லியன் ரூபா பயன்படுத்தப்படாமல் திருப்பி அனுப்பிய விடயம் மிகவும் கவலைக்குரியதாகும்.

கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று கல்வி வலயங்களுக்கு உட்பட்ட 11 பாடசாலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பெருந்தொகை நிதி திருப்பி அனுப்பப்பட்டதாக அப் பாடசாலைகளின் அதிபர்கள், அபிவிருத்திச் சங்க குழுக்கள் என்னை சந்தித்து இவ்விடயத்தை எனது கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சிடமும் நிதிப் பற்றாக்குறை நிலவும் இந்தக் காலகட்டத்தில் மத்திய அரசால் பாடசாலை அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட நிதிகள் திருப்பி அனுப்பப்பட்டமை கவலைக்கு உரிய விடயமாகும்.

எனவே, அடுத்த வருட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நிதி ஒதுக்கப்படும் போது, இந்தப் பாடசாலைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.– என்றார்.

# ‘மலையகம் 200 இற்கு அப்பால்’ நூல் வெளியீட்டு நிகழ்வுகள்






‘மலையகம் 200 இற்கு அப்பால்’ என்னும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது.

அமரர் இர.சிவலிங்கம் ஞாபகார்த்த குழு இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

ஞாபகர்த்த குழுவின் தலைவர் எம். வாமதேவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதிகளாக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் திருமதி சரோஜா சாவித்திரி போல்ராஜ் மற்றும் பெருந்தோட்டம் சமூகம் உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மலையகத்தின் மூத்த எழுத்தாளர்கள் ,பேராசிரியர்கள், இலக்கிய ஆர்வலர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யார் இந்த ரத்தன் டாட்டா?

**ஆ.கார்த்திகேசன்**
ஊடகக்கற்கைகள் பீடம்,
இரண்டாம் வருடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

ஒரு திருமணத்துக்காக 500 கோடி ரூபா செலவு செய்த, இந்திய பணக்காரர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள முகேஷ் அம்பானியை பற்றி அறிந்திருப்பீர்கள்.ஆனால் அதே 500 கோடி ரூபாவை கொவிட் பேரிடர் காலத்தில் நிவாரண நிதியாக டாட்டா டிரஸ்ட் மூலம் அளித்த ரத்தன் நாவல் டாட்டா பற்றி அறிந்திருக்க மாட்டீர்கள். இந்த வருடம் கடந்த ஒக்ரோபர் மாதம் 9 முதல் உலகமெங்கும் பேசுபொருளாக இருந்தது ரத்தன் டாட்டா என்ற பெயரே.

யார் இந்த ரத்தன் டாட்டா?, அவர் செய்த செயல்கள்தான் என்ன? எதற்காக இவரை உலக மக்கள் பேசவேண்டும்? ஆகிய விடயங்களை இனி இந்த எழுத்தாவணம் ஊடாக பார்க்கலாம்.

டாட்டா சன்ஸ் நிறுவனத்தின் முன்னால் தலைவரான ரத்தன் டாட்டா 1937 ஆம் ஆண்டு டிசெம்பர் 28 ஆம் திகதி நாவல் டாட்டா ,சோனு டாட்டா தம்பதியினருக்கு மகனாக சூரத் என்ற இடத்தில் பிறந்தார். இவரது இளமைக் காலம் எல்லோரையும் போல இன்பமானதாக அமைந்துவிடவில்லை.1940 ஆம் ஆண்டின் இடைப்பட்ட பகுதியில் ரத்தன் டாட்டாக்கு ஏழு வயதாக இருக்கும் போது பெற்றோர் விவாகரத்தில் பிரிகின்றனர்.

பின்பு சிறுவனான ரத்தன் தாய் பாசத்துக்காக ஏங்கியபோது பாட்டி நவாஜ்பாய் டாட்டா இன்னொரு தாயாக அரவணைத்துப் பார்த்துக் கொண்டார். ரத்தன் தரம் எட்டுவரை மும்பையில் உள்ள கேம்பியன் பள்ளியில் படித்தார். அதன் பின்னர் மும்பை கதீட்ரல் மற்றும் ஜான் கானான் பள்ளி, சிம்லாவிலுள்ள பிஷப் காட்டன் பள்ளியில் படித்தார். பின்பு நியூயோர்க் நகரிலுள்ள ரிவர்டேல் கண்ட்ரி பள்ளியில் பயின்ற ரத்தன் 1955 இல் பட்டமும் பெற்றார்.

பள்ளிப்படிப்பை முடித்த ரத்தன் டாட்டாவுக்குக் குடும்பத் தொழிலை விடுத்து சிறந்த கட்டடக் கலைஞராக வரவேண்டும் என்பதே எண்ணமாக காணப்பட்டது. ஆனால், தந்தை நாவல் டாட்டா குடும்பத் தொழிலில் களமிறக்கும் நோக்கத்தில் இருந்தார். இந்த சூழ்நிலையில் ரத்தன் டாட்டாவின் தந்தை இயந்திர பொறியியல் படிக்க வேண்டும் என்று நிர்பந்தித்தார்.

இதனால் வேறு வழியின்றி இயந்திர பொறியியல் கற்க அமெரிக்க சென்றார். இயந்திர பொறியியல் கற்கச் சென்றாலும் முழுமையாக அவரால் கல்விக்கற்க முடியவில்லை.இதனால் தனது பாட்டியின் உதவியால் தனக்குப் பிடித்த கட்டடக்கலை பாடத்தைக் கற்றார். இதன் விளைவாக 1962 ஆம் ஆண்டில் கோர்னல் பல்கலைக்கழகத்தில் கட்டமைப்பு பொறியியலில் இளங்கலைப் பொறியியல் பட்டம் பெற்றார். பின்னர் 1975 ஆம் ஆண்டில் ஆர்வர்டு வணிகப் பள்ளியில் உயர் மேலாண்மை பட்டம் பெற்றார். ஜே. ஆர். டி. டாட்டாவின் அறிவுரையின்படி, 1961 ஆம் ஆண்டு ஐ.பி.எம். நிறுவனத்தில் கிடைத்த வேலையை உதறிவிட்டு இவர் 1962 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் டாட்டா குழுமத்தில் சேர்ந்தார்.

இவர் முதலில் டாட்டா மோட்டார் நிறுவனத்தில் ஆறு மாத காலமாக சம்பளமின்றி தொழில் நுணுக்கங்களை கற்றுக் கொண்டார். பின்பு அனல் பறக்கும் டாட்டா ஸ்டீல் நிறுவனத்தில் பணியாற்ற ஜாம்ஷெட்பூருக்கு சென்று பிற உடலுழைப்புப் பணியாளர்களுடன் சேர்ந்து சுண்ணாம்புக்கல் வாருதல் மற்றும் சூளைகளைக் கையாளும் பணிகளைச் செய்தார். இவ்வாறு 30 வருட காலமாக ஒரு நிறுவனத்தின் தலைவராக பதவி உயரும்வரை ஒரு தொழிலாளியாக வேலை செய்தார்.

1966 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தொழில் துறைகளில் பல கட்டுப்பாடுகளை விதித்தார். இதனால் டாட்டா நிறுவனம் பல சவால்களைச் சந்திக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் 1971 ஆம் ஆண்டு கடும் நிதி நிதி நெருக்கடியில் நேல்கோ நிறுவனம் இருந்தது. அந்த சமயத்தில் நேல்கோ நிறுவனத்தின் பொறுப்பு இயக்குனராக ரத்தன் டாட்டா நியமிக்கப்பட்டார்.


அந்தக் காலப் பகுதியில் நவீன தொடர்பாடல் துறைக்கு அதிக கேள்வி காணப்பட்டது. இதனை அறிந்து கொண்ட ரத்தன் டாட்டா செயற்கை கோள் சேவையை நேல்கோ நிறுவனம் ஊடாக வழங்கத் தொடங்கினார். இதன் மூலம் மூன்றாண்டுகளில் 20 லட்ச ரூபாவுக்கு மேல் இலாபம் பெறக் காரணமாக இருந்தார்.

இவ்வாறு வளர்ச்சி கண்ட இந்த நிறுவனத்தின் இன்றைய சந்தை மதிப்பு 2000 கோடி ரூபா ஆகும். இவ்வாறு முதல் வெற்றியை பதிவு செய்த ரத்தன் டாட்டா 1991 ஆம் ஆண்டு மார்ச் 25 ஆம் திகதியன்று

தொடர்ச்சி ▼

# யார் இந்த ரத்தன் டாட்டா?

தொடர்ச்சி▲



டாட்டா நிறுவனத்தின் தலைவரானார்.

இது வரையும் யார் இந்த ரத்தன் டாட்டா? என்பதை அறிந்து கொண்டோம். இனி அவர் செய்த செயல்கள்தான் என்ன என்பதை பார்க்கலாம்.

1991 உலகமயமாக்கல் கொள்கை பிரகடனத்தை இந்திய அரசு முதன்மைப்ப டுத்தியது. இந்த கொள்கையால புதிய புதிய நிறுவனங்கள் தலை தூக்கத் தொடங்கின. இதனைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட ரத்தன், உலகமயமாக்கல் மூலம் டாடா நிறுவனத்தின் தொழில்களைப் பல உலக நாடுகளில் எளிதில் நிறுவ முடியும் என நம்பினார்.

இந்த நம்பிக்கையின் விளைவாக ஐரோப்பிய நாடுகளில் தொழிற்சாலைகளை நிறுவினார். வெளிநாட்டில் வெற்றிகரமாக இயங்கிக் கொண்டிருந்த நிறுவனங்களின் பங்குகளை வாங்கி அதை இந்தியா வில் டாடா நிறுவனம் மூலமாகச் சந்தைப்படுத்தி வெற்றி கண்டார்.

எடுத்துக்காட்டுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிட முடியும். ரத்தன் 2003 ஆம் ஆண்டு டாடா டீ நிறுவனம் மூலமாக பிரிட்டனின் தேயிலை பிரண்ட் நிறுவனமான டெத்லி நிறுவன பங்குகளை வாங்கினார். இது டாட்டா நிறுவனத்தை விட இரண்டு மடங்கு பெரிய நிறுவன மாகும். இந்த நிறுவனத்தை வாங்கியதன் காரணமாக டாட்டா நிறுவனத்தின் குளோபல் பிவறேஜஸ் இன்று உலகின் இரண்டாவது தேயிலை நிறுவனமாக காணப் படுகின்றது.

மேலும் ஐரோப்பாவின் முட்டை உற்பத்தியில் இரண் டாவது பெரிய நிறுவனமான கோரஸ் நிறுவன பங்கு களை டாட்டா ஸ்டீல் நிறுவனம் ஊடாக வாங்கினார்.

2008 ஆம் ஆண்டு லேண்ட் ரோவர், ஜெகுஅர் வாகன நிறுவனங்களை டாட்டா மோட்டார் நிறுவனம் ஊடாக வாங்கினார்.

இவ்வாறு மறைமுகமாக டாட்டா நிறுவனத்தின் வளர்ச்சிக்கும் இந்திய பொருளாதாரத்தின் ஒரு அங்க மாக டாட்டா நிறுவனத்தை இடம்பெறச் செய்வதிலும் கவனம் செலுத்தினார். சர்வதேச சந்தையில் தங்களது நிறுவனத்துக்கான வாய்ப்புகளைத் தேடிக் கண்டு பிடித்தார்.

குறிப்பாக இரும்பு, ஐடி துறை, கெமிக்கல், டீ, கார்கள் என பலவற்றிலும் வெற்றிகரமாகத் தனது வர்த்தகத்தை விரிவுபடுத்தினார்.

1991 இல் வெறும் 10 ,000 கோடி ரூபாவாக இருந்த டாட்டா நிறுவனத்தின் வருவாய், ரத்தன் டாட்டா 2012 ஆம் ஆண்டு பதவி விலகும்போது எட்டு லட்சம் கோடி ரூபாவாகக் காணப்பட்டது. இப்படி ஒரு நிறுவனத்தின் அபரிமிதமான வளர்ச்சிக்கு வித்திட்டவராக ரத்தன் காணப்படுகின்றார்.

இவ்வாறு ஒரு நிறுவனத்துக்காகச் சேவை செய்த ரத்தனை ஏன் உலக மக்கள் பேச வேண்டும் ? என்று நீங்கள் கேட்கலாம்.

கொரோனா பேரிடர் காலப் பகுதியில் டாட்டா டிரஸ்ட் மூலமாகவும், டாட்டா சன்ஸ் நிறுவனம் மூலமாக 1500 கோடி ரூபா நிதி உதவி வழங்கியுள்ளார்.

2008 ஆம் ஆண்டு நவம்பர் 26 அன்று மும்பையில் நிகழ்ந்த தீவிரவாத தாக்குதலில் மும்பையில் உள்ள டாட்டா நிறுவனத்தின் தாஜ்ஹோட்டல் தீக்கரையானதுடன் உயிர் சேதங்களும் ஏற்பட்டன. இதன்போது பாதிக்கப்பட்ட தமது ஊழியர்களுக்கு இழப்பீடுகள் வழங்கியதுடன் ஊழியர்களின் நலன் சார்ந்து கவலைப்பட்டார். மற்ற தொழில் அதிபர்களை போல் ஒரு ஹோட்டல் எரிந்ததைப்பற்றிக் கவலை கொள் ளவில்லை.

அமெரிக்க கார்னல் பல்கலைக்கழகத்தில் இந்திய மாணவர்கள் படிப்பதற்காக சுமார் 230 கோடி ரூபா செலவில் புலமைப்பரிசில் திட்டத்தை தொடங்கியுள்ளார். அவருடைய மொத்த இலாபத்தில் கிட்டத்தட்ட 65 சதவீதத்தை வெவ்வேறு விடயங்களுக்குப் பயன்படுத்தும் தொழில் அதிபராகக் காணப்படுகின்றார். ஆண்டுக்கு ஒரு பில்லியன் டொலருக்கும் மேல் வருவாயை கண்டு வரும் ஐடி நிறுவனமான டாடா கன்சல்டன்ஸி சர்வீசஸ் இன்றளவிலும் இந்தியாவில் ஐடி துறையில் உள்ள முன்னணி நிறுவனங்களில் ஒன்றாகும். இந்த நிறுவ னம் மூலம் பல ஆயிரம் ஊழியர்களின் வாழ்க்கைக்கு வழியமைத்துக் கொடுத்துள்ளார்.

ஏழைக் குழந்தைகளுக்கும், ஆதரவற்ற குழந்தைகள், மாற்றுத்திறனாளிகள் என பல லட்சம் பேருக்கு தனது டாட்டா டிரஸ்ட் நிறுவனம் மூலமாக பல உதவிகளைச் செய்துள்ளார். அது மட்டுமல்ல நாய்கள் மீது தனிப் பிரியம் கொண்ட ரத்தன் டாட்டா மும்பையில் இருக்கும் அவரது வீட்டில் தெரு நாய்களுக்கு என்று தனியிடம் ஒதுக்கியுள்ளார். மழைக் காலங்கள் தெரு நாய்கள் கஷ்டப்பட கூடாது என்பதற்காக இதனை செய்துள்ளார். தனது நிறுவன ஊழியர்கள் மீது அக்கறை கொண்ட இந்த மனிதன் ஊழியர்களுக்காக ஓய்வூதியக் கொடுப்பனவு, பெண்களுக்கான மகப்பேறு கால விடுமுறை போன்றவற்றையும் கொடுத்துள்ளார். தனது ஊழியர் ஒருவர் சுகயீனம் காரணமாக வீட்டில் இருந்த போது அவரின் இல்லத்துக்கே சென்று பார்வையிடும் அளவுக்கு ரத்தன் டாட்டா ஊழியர்களின் நலன் மீது அக்கறை கொண்ட நபராக இருந்துள்ளார்.

ஒரு சமயம் டாடா சுமோ கார்கள் தங்களுக்கு வேண் டும் என்று பாகிஸ்தான் அரசு மிகப் பெரிய ஆர்டர் ஒன்றை டாடா நிறுவனத்துக்குக் கொடுத்தது. அப் போது“பாகிஸ்தானுக்கு ஒரு கார் கூட கொடுக்க முடியாது” என நிராகரித்து விட்டாராம் டாடா. இன்றைய காலகட்டத் தில் இப்படி ஒரு வாய்ப்பு கிடைத்தால், எந்த நிறுவன மேனும் விட்டுக் கொடுக்குமா எனத் தெரியவில்லை. ஆனால் அந்தளவுக்கு தாய் நாட்டின் மீது பற்று கொண் டவராக ரத்தன் டாடா இருந்திருக்கின்றார்.

இவ்வாறு மனித நேயத்துக்காக வாழ்ந்து காட்டிய மனிதனுக்கு 2000 ஆம் ஆண்டு ஜனவரி 26 திகதி 50 ஆவது இந்தியக் குடியரசு தினத்தை முன்னிட்டு படைத்துறை சாராத ஒரு குடிமகனுக்கு வழங்கும் மூன்றாவது பெரிய சிறப்புப் பதக்கமான பத்ம பூசண் விருது வழங்கப்பட்டது. அதன் பின்னர் 2008 ஆம் ஆண்டு ஜனவரி 26 பத்ம பூசண் விருது வழங்கி இந்திய அரசு ரத்தன் டாட்டாவை பெருமைப்படுத்தியது.

இறுதிவரை திருமணம் செய்து கொல்லாத ரத்தன் டாட்டா இன்றும் தன்னம்பிக்கையின் அடையாளமாகவும் ஒவ்வொருவரின் வாழ்க்கை பாதைக்கான முன்மாதிரியாக காணப்படுகின்றார். பணம் யாரிடம் அதிகம் இருக்கின்றது என்பது முக்கியமில்லை. அதனை எவ்வாறு பயன்படுத்துகின்றோம் என்பதே வருங்காலம் எம்மை பற்றி பேச காரணமாகின்றது. அந்த விதத்தில் “உங்கள் மீது யாரேனும் கற்கள் வீசினால் அதனை கொண்டு கட்டடம் எழுப்புங்கள்” என்ற வரிகளுக்குச் சொந்தமானவரான ரத்தன் நாவல் டாடாவை உலகம் மறந்தாலும் மனிதநேயம் கொண்ட உள்ளங்கள் மறப்பதில்லை.



# அட்டாளைச்சேனை கலாசாலையில் ஆசிரியர்களது கல்விக் கண்காட்சி

(பாறுக் ஷிஹான்)

அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் கல்வி இளமானி சிறப்பு கற்கை நெறி 2022 - 2025 ஆம் ஆண்டு ஆரம்பப் பிரிவு ஆசிரிய மாணவர்களால் 'ஆரம்பப் பிரிவுக்கான விஞ்ஞானம்' எனும் தொனிப் பொருளில் கண்காட்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதியாக கணேசரத் தினமும் கௌரவ அதிதிகளாக ஆரம்பப் பிரிவு ஆசிரியர் மாணவர்களுக்கு வழிகாட்டல் விரிவுரையாளர்களாகக் கடமை யாற்றிய கே. கமலதாசன் மற்றும் எம்.எச்.எஸ். ஆர் மஜீதிய்யா ஆகியோரும் விசேட அதிகளாக ஏ.எம். முபாரக் கே.எல்.எம். பார்சாட், ரி. திலகாராஜா உட்பட ஏனைய விரிவுரையாளர்களான ஏ.ஜே. வசீல் ஏ.ஏ. ரமீஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வுகளுக்கு இணைப்பாளராக எஸ்.என்.ஏ அரூஸ் கடமையாற்றினார்.






# கிழக்கு மாகாண அதிபர், ஆசிரியர்கள் புறக்கணிப்பு என்கிறார் இம்ரான் எம். பி.!

(அபு அலா)

கடந்த ஆண்டு க.பொ.த. சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகளின்படி கிழக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் 2 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இது தொடர்பாக நடத்தப்பட்ட பாராட்டு விழாக்களில் கிழக்கு மாகாணத்திலுள்ள அதிபர்களும், ஆசிரியர்களும் புறக்கணிக்கபட்டுள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதுதொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்தலால் இரத்தினசேகரவை நேரில் சந்தித்து குறித்த விடயம் பற்றிய தகவலை அவரின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் க.பொ.த. சாதாரண தர பரீட்சை அடைவு மட்டத்தில் பின்னடைந்திருந்த கிழக்கு மாகாணம் கடந்த ஆண்டு 2 ஆம் இடத்துக்கு முன்னேறியிருந்தது. இதற்காக கிழக்கு மாகாண பிரதம செயலாளரால் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இதேபோன்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளரால் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் பாராட்டுப் பத்திரம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

எனினும், அடைவு மட்ட அதிகரிப்புக்குப் பிரதான காரணமாக இருந்த ஆசிரியர்கள், அதிபர்கள் எவரும் இந்த விடயத்தில் கௌரவிக்கப்படவில்லை. அவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்கள் பெரிதும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற பாரபட்சங்கள் தங்களது நிர்வாகத்தின் கீழ் இனிமேல் இடம் பெறாது என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும் என்று கிழக்கு ஆளுநரிடம் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

எனவே, இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களையும் விரைவில் கௌரவிக்க ஏற்பாடு செய்ய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஆளுநரிடம் கேட்டுள்ளார்.






# 2 லட்சம் ரூபா வெள்ள நிவாரண உதவி நேற்று வழங்கிய சந்நிதியான் ஆச்சிரமம்

யாழ்ப்பாணம், மல்லாகம், குளமங்கால் கிராமத்தில் இயற்கைப் பேரிடரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 40 குடும்பங்களுக்கு, 2 லட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியமான உணவுப் பொருள்கள் குளமங்கால் சிரேஷ்ட பிரஜைகள் நலநோன்பு நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது.

நேற்று (17) செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற இந்த உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில், சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன தாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று உதவிகளை வழங்கி வைத்தார்.




# வலிகாமம் வலய பாடசாலைகளது மாணவ முதல்வர்களுக்குப் பயிற்சி



ரட்ணம் நிதியத்தின் நிதி அனுசரணையுடன் விசன்ஸ் நிறுவனத்தால் வலிகாமம் வலயத்துக்கு உட்பட்ட ஐந்து பாடசாலைகளின் மாணவ முதல்வர்களுக்கு ஐந்து நாள்கள் தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில், நடத்தப்பட்ட இந்த தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறையில் வட்டு இந்துக் கல்லூரி, வட்டு மத்திய கல்லூரி, சுழிபுரம் விக்டோரியா கல்லூரி, பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலயம் மற்றும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச் சார்ந்த 36 மாணவத் தலைவர்கள் இதில் பயிற்சி பெற்றனர்.

மாணவர்களைச் சுய விழிப்புணர்வு, தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பல், தலைமைத்துவம், குழுச் செயற்பாடு, தொடர்பாடல், திட்டமிடல், நேர முகாமைத்துவம் மற்றும் முன்வைப்பு திறன் சார்ந்த திறன் விருத்திக்கும், தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாழ்க்கை தொடர்பான ஊக்குவிப்புக்கும் இந்தப் பயிற்சி ஒரு வாய்ப்பாக அமைந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

வலிகாமம் வலயத்தின் ஆலோசனை மற்றும் ஒருங்கிணைப்புடன், கலாநிதி இரட்ணம் நித்தியானந்தனின் வழிகாட்டலில் நடத்தப்பட்ட இந்த பயிற்சி பட்டறையில், விசன்ஸ் நிறுவனத்தின் தலைவர் ந.தெய்வேந்திரராஜா, பிரதம நிறைவேற்று அதிகாரி அ.மயூரன் ஆகியோர் பிரதம வளவாளர்களாகவும், விசன்ஸ் நிறுவனத்தின் நான்கு பயிற்சியாளர்கள் வளவாளர்களாகவும் செயற்பட்டுப் பயிற்சியை வழங்கினர்.




# 20 லீட்டர் கசிப்புடன் ஒருவர் வீரமுனையில் கைதாகினார்!

(சம்மாந்துறை
தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீரமுனை பல்நோக்கு கூட்டுறவு வீதியில் கசிப்புடன் ஒருவரை சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

சம்மாந்துறை விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 20 லீட்டர் கசிப்பை மீட்ட அதிரடிப்படையினர் சந்தேக நபரையும் கைது செய்துள்ளனர்.



வீரமுனை 04, சம்மாந்துறை பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், இந்த கைது நடவடிக்கையானது சம்மாந்துறை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரத்னமல்லவின் பணிப்புரைக்கமைய உப பொலிஸ் பரிசோதகர்களான ஜெயஸ்ரீ மற்றும் விஜயஸ்ரீ, விசேட அதிரடிப் படை சார்ஜன் சாகர, சார்ஜன் பண்டார, சாரதி குமார ஆகியோரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# சாவகச்சேரியில் வீதியில் காவோலை போடப்பட்டு அபிவிருத்திப் பணிகள்!

## விளக்கம் கோரும் நகரசபை முன்னாள் உறுப்பினர் கிஷோர்

(த.சுபேசன்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மீசாலை – அல்லாரை பிரதான வீதியானது காவோலைக்கு மேல் கற்கள் போடப்பட்டு காபெற் வீதியாக அமைக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் இது தொடர்பான விளக்கத்தை சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் கிஷோர் மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்திடம் கோரியுள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் உள்ள சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட மீசாலை அல்லாரை பிரதான வீதி புனரமைக்கும் செயற்பாடு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வீதி புனரமைக்கப்படும் போது வீதியின் குறிப்பிட்ட சில இடங்களில் ஒரு அடி ஆழமான நீளமான குழிகள் தோண்டப்பட்டு அதற்குள் காவோலைகள் போடப்பட்டு அதற்கு மேலாக கற்கள் நிரவப்பட்டு வீதி புனரமைப்பது பொது மக்களிடையே ஆச்சரியத்தையும் விமர்சனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான முறையில் பிரதான வீதி ஒன்று புனரமைக்கப்படுமா என்று மக்கள் விசனத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தினர் உடனடியாக உரிய நடவடிக்கை எடுப்பதோடு அதற்கான விளக்கத்தையும் பொது மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று அவர் தெரிவித்துள்ளார்.



# இலங்கை - இந்தியா கடற்டை கூட்டுப்பயிற்சி தொடங்கியது

விசாகப்பட்டினத்தில் இலங்கை – இந்தியா கடற்டை கூட்டுப்பயிற்சி ஆரம்பித்துள்ளது.

இலங்கை – இந்தியா இடையேயான கடற்படைக் கூட்டுப்பயிற்சி நேற்று 17 ஆம் திகதி தொடங்கியது. இந்த பயிற்சி 20 ஆம் தகதி வரை விசாகப்பட்டினத்தில் கிழக்கு கடற்படை சார்பில் நடைபெறவுள்ளது.

இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ள பயிற்சியின் துறைமுக கட்டப் பயிற்சி நேற்றும் இன்றும், கடல் மார்க்கப் பயிற்சி நாளையும் நாளை மறுதினமும் நடைபெறவுள்ளது.

கடந்த 2005 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட SLINEX எனப்படும் கடற்படை கூட்டுப்பயிற்சி பல ஆண்டுகளாக இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையிலான கடல்சார் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான இருதரப்பு கடற்படை பயிற்சிகளாகும்.

இந்திய கடற்படையின் ரோந்து கப்பலான ஐ.என்.எஸ், இலங்கை கடற்படையின் ரோந்து கப்பலான எஸ்.எல்.என்.எஸ் சயுர ஆகியவை சிறப்பு படை குழுக்களுடன் பயிற்சியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

நாளை தொடங்கும் கடல் மார்க்கப் பயிற்சியில், சிறப்புப் படை நடவடிக்கைகள், துப்பாக்கிச்சூடுதல், தகவல் தொடர்பு பயிற்சிகள், கடல்சார் நடைமுறைகள் உள்ளிட்ட கூட்டுப் பயிற்சிகள் இடம்பெறவுள்ளன.

# வெடிகுண்டு மிரட்டல் விடுத்தால் ஒரு கோடி ரூபா அபராதம்!

இந்தியாவின் பல்வேறு விமான நிறுவனங்களைச் சேர்ந்த விமானங்களுக்கு அவ்வப்போது வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்படுகிறது. இதனை தொடர்ந்து நடைபெறும் சோதனையால் பயணிகள் பெரிதும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இதனையடுத்து பலமணி நேரம் நடைபெறும் சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் புரளி என்று தெரிய வருகிறது. இதனால் பல விமானங்களின் சேவைகளில் மாற்றமும் தாமதமும் ஏற்பட்டது.




இதனை தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில், விமான நிலையங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுத்தால் இந்திய மதிப்பின் படி 1 கோடி ரூபா வரை அபராதம் விதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

1 கோடி ரூபா வரை அபராதம் விதிக்கும் வகையில் விமான பாதுகாப்பு விதிகளில் மத்திய அரசு திருத்தம் மேற்கொண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. கடந்த ஒக்டோபர் மாதத்தில் 600 இற்கும் மேற்பட்ட விமானங்களுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்ட நிலையில் இருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜோர்ஜியாவில் இந்திய உணவகத்தில் விஷவாயு தாக்கி 12 பேர் உயிரிழப்பு

ஜோர்ஜியாவில் இந்திய உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்த 12 இந்தியர்கள் சடலாக மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் கார்பன் மோனாக்சைடு விஷவாயு தாக்கி இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது.

ஐரோப்பிய நாடான ஜோர்ஜியாவின் மலைப்பகுதியான குடவுரி என்ற இடத்தில் சொகுசு விடுதி உள்ளது. இதில் இந்திய உணவுகளை பரிமாறும் உணவகம் உள்ளது. இதில் வடஇந்திய தொழிலாளர்கள் 12 பேர் பணியாற்றி வந்தனர். இவர்கள் விடுதியின் இரண்டாவது மாடியில் உள்ள அறைகளில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் இவர்கள் தங்கள் அறைகளில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். அவர்கள் உடலில் காயம் எதுவும் இல்லை. அவர்களின் படுக்கை அறைகளுக்கு அருகிலேயே மூடிய பகுதிக்குள் ஜெனரேட்டர் ஒன்று வைக்கப்பட்டுள்ளது.



கடந்த வெள்ளிக்கிழமை இரவு மின் விநியோகம் துண்டிக்கப்பட்டதும் ஜெனரேட்டர் தானாக இயங்கியது. அப்போது கார்பன் மோனாக்சைடு விஷவாயு வெளியாகி இவர்கள் இறந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. எனினும் காரணத்தை துல்லியமாக உறுதிசெய்ய தடயவியல் மருத்துவப் பரிசோதனைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.



# ரஷ்ய அணுசக்தி பாதுகாப்பு தலைவர் படுகொலை; பின்னணியில் உக்ரைன்

ரஷ்ய அணுசக்தி பாதுகாப்புப் படையின் தலைவர் இகோர் கிரிலோவின் படுகொலையின் பின்னணியில் உக்ரைன் பாதுகாப்புப் படை உள்ளதாக வெளிநாட்டு செய்திகள் கூறுகின்றன.

மொஸ்கோவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ரஷ்ய அணுசக்தி பாதுகாப்புப் படையின் தலைவர் இகோர் கிரில்லோவ் நேற்று உயிரிழந்தார்.

இந்தத் தாக்குதலில் இகோர் கிரில்லோவின் உதவியாளரும் கொல்லப்பட்டார்.

வெடிபொருள்கள் அடங்கிய உந்துருளியை வெடிக்கச் செய்து இந்தப் படுகொலை நடத்தப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.



# சிரியாவில் மனிதப் புதைகுழிகளில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுப்பு

சிரிய தலைநகர் டமாஸ்கஸின் வடமேற்கு புறநகர்ப் பகுதியான அட்ராவில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகளில் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வயிட் ஹெல்மெட்ஸ் என்ற மனிதாபிமான அமைப்பின் மீட்புக் குழுவினர் இந்த மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக, பஷர் அல்-அசாத்தின் ஆட்சியில் சிரியாவின் சிறைகளில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுக் கொன்று புதைக்கப்பட்டவர்களின் புதைகுழிகள் பற்றிய காணொளிகள் இணையத்தில் வெளியிடப்பட்டன.

இதனடிப்படையில் அட்ராவில், வெள்ளை ஹெல்மெட்ஸ் அமைப்பு முன்னெடுத்த தேடுதலில் பல பெரிய வெள்ளை பிளாஸ்டிக் பைகளில் உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ஏழு மனித உடல்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன எனவும் அவை மரபணு ஆய்வுக்காக தனித்தனியாக வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான மக்கள் காணாமல் போயுள்ளனர் எனவும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய உண்மையைக் கண்டறிவதற்கு சில கால அவகாசம் தேவை என்றும் வயிட் ஹெல்மட்ஸ் மனிதாபிமான அமைப்பு தெரிவிக்கிறது.



அமெரிக்காவின் பால்டிமோர் கவுன்டியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்துடன், இந்த சம்பவத்தில் 9 பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பக்கங்கள் 02

கனடா முரசு

புதன்கிழமை 18/12/2024

### நியூ பிரவுன்ஸ்விக்கில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி இருவர் உயிரிழப்பு

கடனாவின் நியூ பிரவுன்ஸ்விக் பிராந்தியத்தின் மொன்க்டொனில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஒன்றுக்கும் மேற்பட்ட வாகனங்கள் மோதிக்

02



# கனடாவில் வரி விடுமுறையினால் சில்லறை வியாபாரிகள் பாதிப்பு

**கனடாவில் மத்திய அரசாங்கம் வரி விடுமுறை நடைமுறையை அறிமுகம் செய்துள்ளது.**

**கடந்த சனிக்கிழமை முதல் இந்த வரி விடுமுறை சலுகை திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.**

**எனினும் இந்த வரி விடுமுறை சலுகையினால் சிறிய வர்த்தக நிறுவனங்கள் அசௌகரியங்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

பொருள்கள் மற்றும் சேவைகள் வரி மற்றும் மாகாண விற்பனை வரி என்பன எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு மக்களிடமிருந்து அறவீடு செய்யப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வரி விடுமுறை நடைமுறையினால் சில்லறை வர்த்தகர்கள் பாதிப்புகளை எதிர்நோக்கி உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உணவுப் பொருள்கள், பியர், வைன், உணவக உணவுப் பொருள்கள், சிறுவர் ஆடைகள், விளையாட்டு பொருள்கள் மற்றும் புத்தகங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களுக்கு இவ்வாறு வரி விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் பண்டிகை காலத்தை முன்னிட்டு கனடிய மத்திய அரசாங்கம் இவ்வாறு வரி விடுமுறையை அறிவித்துள்ளது.



# வேலையற்றோர் எண்ணிக்கை ரொறன்ரோவில் அதிகரிப்பு

கனடாவின் ரொறன்ரோவில் வேலையற்றோர் எண்ணிக்கை அதிகரித் துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கோவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் இவ்வாறு அதிகளவானோர் வேலைவாய்ப்பின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளமை இதுவே முதல் சந்தர்ப்பமாகும்.

கடந்த நவம்பர் மாத புள்ளிவிபர தகவல்களின் அடிப்படையில் இந்த விடயம் தெரிய வந்துள்ளது.

ரொறன்ரோவில் சுமார் 380000 பேர் தொழில் தேடிக் கொண்டிருக்கின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி ரொறன்ரோவின் வேலையற்றோர் எண்ணிக்கையானது 8.1 வீதமாக காணப்படுகின்றது.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தின் பின்னர் இவ்வாறு அதிக எண்ணிக்கையில் வேலையற்றோர் பதிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரொறன்ரோவில் வேலையற்றோர் எண்ணிக்கை இந்த ஆண்டில் 1.5 வீதத்தினால் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# கனடாவின் நாணயத்தாள்களில் மரதன் ஓட்ட வீரரின் உருவப் படம்

கனடாவின் நாணயத்தாள்களில் பிரபல மரதன் ஓட்ட வீரர் டெரி ஃபாக்சின் உருவம் அச்சிடப்பட உள்ளது. ஐந்து டாலர் நாணயத் தாள்களில் ஃபாக்சின் உருவப்படம் அச்சிடப்பட உள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கனடிய மத்திய அரசாங்கம் மரதன் ஓட்ட வீரர் பாக்ஸை கௌரவிக்கும் வகையில் இந்த தீர்மானத்தை எடுத் துள்ளது.

கனடாவிற்கு ஆற்றிய சேவை களை கௌரவப்படுத்தும் வகையில் நாணயத்தாளில் உருவப் படத்தை அச்சிட தீர்மானிக்கப்பட்டது.

அந்த வகையில், இந்த நாணயத் தாளில் உருவப் படத்தை அச்சிடுதல் தொடர்பில் சுமார் 600 பரிந்துரைகள் முன்மொழிக்கப்பட்டன.

இவ்வாறான பரிந்துரைகளில் பொக்ஸின் பெயர் தெரிவு செய்யப்



பட்டுள்ளது.

தெறி பொக்ஸின் உருவப்படத்தை தெரிவு செய்தமைக்காக நன்றி பாராட் டுவதாக அவரது குடும்பத்தினர் தெரி விக்கின்றனர்.

கனடிய அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக குடும்பத் தினர் தெரிவித்துள்ளனர்.

புற்று நோயினால் பாதிக்கப்பட்ட பொக்ஸ் பல்வேறு சவால்களை சந்தித்த போதிலும் மரதன் ஓட்ட போட்டிகளில் பங்கேற்று தனது அசைக்க முடியாத நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தார்.

இது ஏனையவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாககாணப்படுகின்றது. பல்வேறு நெருக்கடிகள் வந்த போதி லும் அவர் தனது இலக்கினை எட்டுவதற்கு அயராது உழைத்தார்.

புற்றுநோயை இல்லாது ஒழிப் பதற்காக பல்வேறு நாடுகளில் மரதன் ஓட்ட போட்டிகளில் பங்கேற்று அவர் சுமார் 800 மில்லியன் டொலர்களை திரட்டி இருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

1958 ஆம் ஆண்டு பிறந்த டெரி பொக்ஸ், 1981 ஆம் ஆண்டில் புற்று நோய் காரணமாக மரணித்தார்.

பொக்ஸை கௌரவிக்கும் வகை யில் பல்வேறு வீதிகளுக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது.




# பறக்கும் விமானத்தில் சிறுவர் துஷ்பிரயோகம்

## பெண் கைது

கனடாவில் விமானத்தில் மோச மாக நடந்து கொண்ட பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரொறன்ரோவிலிருந்து எட்மோன் டன் நோக்கிப் பயணம் செய்த விமா னத்தில் இந்த சம்பவம் பதிவாகி யுள்ளது.

நடு வானில் பறந்து கொண்டிருந்த விமானத்தில் மேற்படி பெண் சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்த குற்றச்சாட்டின் அடிப்படை யில் அந்தப் பெண்ணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எட்மோன்டன் விமான நிலையத் தில் வைத்து பெண் கைது செய்யப் பட்டுள்ளார்.

சம்பவத்தில் சிறு காயங்களுக்கு உள்ளான சிசு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் விசார ணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள தாகவும், கைது செய்யப்பட்ட பெண் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் விமான நிலையத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

## நியூ பிரவுன்ஸ்விக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் 32 வயதான பெண் ஒருவரும், 42 வயதான ஆண் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த இருவரும் மொன்ட்கோனைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

